அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 5/97/(IV)

எனது இல: XTU/21(III)7
அரசாங்க நிருவாக ,உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.
1999.11. 26

அமைச்சுக்களின் செயலாளர்கள்/
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்,

அரச அலுவலர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றை
ஏற்படுத்தல் (அக்ரஹார)

மேற்குறிப்பிடப்பட்ட விடயத்துடன் சம்பந்தப்பட்ட 1997.01.31 ஆந் திகதிய 5/97 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 5 இன்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் உரிமைக் கோரிக்கைகளை நிருணயிக்கும் போது ஏற்படும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ளும் இன்னுமொரு நடவடிக்கையாக 1999 ஒற்றோபர் மாதத்திலிருந்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பின்வரும் கிளை அலுவலகங்களுக்கும் கொடுப்பனவுகளைச் செய்வதற்காக வேண்டிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| மாத்தளை மாவட்டம் - | மாத்தளை கிளை அலுவலகம் |
| நுவரஎலியா மாவட்டம்- | நுவரஎலியா கிளை அலுவலகம் |
| பொலனறுவை மாவட்டம்- | ஹிங்குறக்கொட கிளை அலுவலகம் |
| புத்தளம் மாவட்டம் - | சிலாப கிளை அலுவலகம் |
| அம்பாந்தோட்டை மாவட்டம்- | அம்பலாந்தொட்ட கிளை அலுவலகம் |
| மொனராகலை மாவட்டம் - | மொனராகலை கிளை அலுவலகம் |

03. இனிவரும் காலங்களில் மருத்துவ விலை விவரப் பட்டியல்களை மீளநிரப்புவதற்-கான உரிமை கோரிக்கைகளை மேற்படி கிளை அலுவலகங்களுக்கு சமர்ப்பிக்கவும்.

(மகிந்த பந்துசேன)
செயலாளர்.
அரசாங்க நிருவாக,உள்நாட்டலுவல்கள் அமைச்சு.